# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2142/66 - 2019 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2019.09.25
**2142/66 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை*

**2019 ஆம் ஆண்டின் 178 ஆம் இலக்க கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/6/2018/எச்/டபிள்யூ/406.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : எச்டிஎஸ்/காணி/14/எப்/11.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் அனுமதி அளிக்கின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 11.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், அம்பாந்தோட்டை.

**2. காணியின் விபரம் :** தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், மகம் பத்துவை சிறு பிரிவில், ஆரபொக்க கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை மா அதிபதி சார்பாக அம்பாந்தோட்டை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2019.02.15 ஆந் திகதிய முதற் சுவட்டு இல. எச்/எச்எம்பி/ஆர்டிஏ/2019/31 இல் துண்டு ஏ இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு பின்வரும் எல்லைகளினாலும் விஸ்தீரணங்களினாலும் விபரிக்கப்பட்டுள்ளது :

**01. துண்டு 'ஏ' - ஆரபொக்ககெலே - விஸ்தீரணம்: 0.0131 ஹெக்டயார்**

வடக்கு : பலவின்னகே ரஞ்ஜித் முதுகுமாரன உரிமை கோரும் ஆரபொக்ககெலே ; கிழக்கு : அரசு உரிமை கோரும் ஆரபொக்ககெலே; தெற்கு : துண்டு பி ; மேற்கு : துண்டு பி, இலங்கை மஹாவெலி அதிகாரசபை உரிமை கோரும் ஆரபொக்ககெலே மற்றும் பலவின்னகே ரஞ்ஜித் முதுகுமாரன உரிமை கோரும் ஆரபொக்ககெலே.

10 - 367


G31096 - 26 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.